# தமிழ்நாடு பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு மற்றும் பசுமை சங்கம்
# 8வது தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை-15

# தமிழ்நாடு பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம்

இயற்கை வள ஆதாரத்தை அதிகரிப்பதற்கு

**தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல்**

**அறிவிக்கை**

**தனியார் நிலங்களில் மரங்கள் வளர்த்தல், தரிசு நில மேம்பாடு, நீர்பிடிப்பு பகுதி மேலாண்மை ஊரக திட்டமிடுதல் போன்ற இனங்களில் அனுபவம் உள்ள நிறுவனங்களிருந்து தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம் நுண்திட்டமிடுதலுக்கான கையேடு தயாரிக்க விருப்பம் கோரப்படுகிறது. கீழ்க்கண்ட வரையறைக்கு உட்பட்டும் மற்றும் இப்பணி மேற்கொள்ளத் தேவையான தொகையினை குறிப்பிட்டும் கீழ்க்கண்ட முகவரிக்கு விருப்ப கடிதம் 06-01-2012க்குள் அனுப்ப கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**


Project Director (Tree Cultivation in Private Land),
Tamil Nadu Bio-Diversity and Greening Project
Principal Chief Conservator of Forests Office,
No. 1, Jeenis Road, Panagal Maaligai,
Saidapet, Chennai 600 015.
Phone: 24310060
Email: irul55@gmail.com


**திட்ட அறிமுகம்**

தமிழ்நாட்டில் **"தமிழ்நாடு பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம்"** என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2011-12 முதல் 2018-19 வரை செயல்படுத்தபடவுள்ளது. பல்லுயிர் பாதுகாப்பிற்கு உதவும் வகையில் இத்திட்டத்தில் **"தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல்"** ஒரு சார்பு நடவடிக்கையாக நிறைவேற்றப்படும். "தனியார் நிலங்களில் மரம் வளர்த்தலின்" பிரதான நோக்கம் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்துவதுடன் சூற்றுச்சூழல் மேம்பாடு மற்றும் நீடித்த வளர்ச்சியினை உறுதிப்படுத்துதலும் ஆகும். இத்திட்டம் 4000 முதல் 5000 கிராமங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும் இத்திட்டத்தின் மூலம் 10 கோடி மரங்கள் தனியார் நிலங்களில் நடவு செய்யப்படவுள்ளது. பயனாளிகளுக்குத் தேவைப்படும் மரக்கன்றுகள் உற்பத்தி மற்றும் தோட்டம் எழுப்பும் செலவு திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் கிராம மக்களின் முழு ஒத்துழைப்போடும், அவர்களுடைய விருப்பத்தின் பேரிலும், நுண் திட்டமிடல் அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

**தனியார் நிலங்களில் மரம் வளர்த்தலின் முக்கிய நோக்கங்கள் :**

1. புவியியல் பரப்பில் 33% மரப்பரப்பு இலக்கினை எய்த உதவுதல்.
2. உள்ளூர் மற்றும் வர்த்தக தேவைக்கான தடிமரத் தேவையினை பூர்த்தி செய்து காடுகளின் மீது உள்ள அழுத்தத்தை குறைத்தல்.
3. விவசாயிகளுக்கு ஒரு நிலையான மற்றும் இலாபகரமான பொருளாதார நிலையினை உருவாக்குதல்.
4. பண்ணை தோட்டங்களை உருவாக்க விவசாயிகளின் மரம் வளர்ப்பு தொழில்நுட்ப திறன்களை வலுப்படுத்துதல்.

### இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகளின் தகுதி

1. இரண்டு ஹெக்டருக்கு குறைவான நிலம் வைத்திருக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் அவர்கள் நிலங்களிலோ அல்லது வீடுகளுக்கு அருகாமையிலோ மரங்கள் வளர்க்க முன்வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மரம் வளர்ப்பில் மிக்க ஈடுபாடு உள்ளவர்கள்.
3. ஐந்து ஹெக்டருக்கு கீழ் நிலம் வைத்துள்ள விவசாயிகள்

### திட்ட நிறைவேற்ற வரையரைகள்

1. விவசாயிகளுக்கு ஒரு முறை மட்டுமே இத்திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படும். மற்றும் மரங்களின் அறுவடைக்கு பிறகு நிலத்தின் பயன்பாடு விவசாயிகளின் விருப்பத்தை சார்ந்திருக்கும்.
2. மரங்கள் அறுவடைக்கு பிறகு விவசாயிகளினால் தானகவே மீண்டும் மரசாகுபடி மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் விழிப்புணர்வு மேற்கொள்ளப்படும்.
3. தனியார் நிலங்களில் வளர்க்கப்பட்ட மரங்கள் முதிர்ச்சி அடையும்வரை, அவர்கள் மரங்களை வெட்டக் கூடாது என விவசாயிகளிடம் ஒரு ஒப்புதல் கடிதம் பெறப்படும்.
4. விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்ப மர இனங்களின் தேர்வு துரித கள மதிப்பீட்டு அடிப்படையில் அறியப்படும்.
5. வன சரக அலுவலர் உயிர் செடிகளை ஆய்வு செய்வார்.
6. உயிர்ச்செடிகளின் அடிப்படையில் ஊக்க தொகை தோட்டங்கள் எழுப்பப்பட்ட மூன்றாவது நிதி ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
7. மரம் நடும் இடத்தின் தன்மை, சந்தைப்படுத்துதல், தொழிற்சாலைகளின் மரத் தேவை போன்ற காரணிகளின் அடிப்படையில் மர இனங்கள் தேர்வு செய்யப்படும். ஐந்தாண்டு சுழற்சியை விட, பல்வேறு உள்ளூர் காரணிகளால் நீண்டகால சுழற்சி (10 முதல் 30 ஆண்டுகள் கொண்ட சுழற்சி) மர இனங்கள் பரிந்துரைக்கப்படும். எனினும் குறுகிய கால மர இனங்கள் (சவுக்கு போன்ற மரங்கள்) அதிக பட்சமாக 30%ம் (சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50% வரை அனுமதிக்கப்படும்) மேலும் குறைந்த பட்சம் 70% நடுத்தர மற்றும் நீண்ட கால சுழற்சி மர இனங்களை நட விவசாயிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.

### கையேடு தயாரிப்புப் பணி

**தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்த கிராம அளவில் தயாரிக்கப்படவேண்டிய நுண்திட்டத்தினை தயாரிக்க வழிகாட்டு நெறிமுறைகள் கையேடு தயாரிக்க வேண்டும்.**

கிராம அளவில் தனியார் நிலங்களில் மரம் நடுதல் தொடர்பான நுண் திட்டம் தயாரிக்க இக்கையேடு பயன்படுத்தப்படுவதால் மக்கள் பங்கேற்பு இயக்கம் தொடர்புடைய உத்திகளை (Tools) பயன்படுத்தி நுண்திட்டமிடப்படவேண்டும். இதற்கான வழிமுறைகளை இக்கையேடு விவரமாக விளக்கவேண்டும். மேலும் நுண்திட்டத்திற்கான படிவம் மற்றும் உள்ளடக்க அட்டவணைகள் கையேட்டில் இணைக்கப்படவேண்டும்.

### இக்கையேடு கீழ்க்கண்ட விவரங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

1. திட்ட அறிமுகம்.
2. தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பு திட்டத்தின் அவசியம்.

3. கிராமத்தின் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படவேண்டிய முறை.

4. கிராமத்தின் நில மற்றும் நீர் வள விவரங்கள்.

5. தற்போதைய விவசாய நிலை.

6. விவசாயிகளின் வகைகள்.

7. தற்போது விவசாயிகளால் மரச்சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ள விவரங்கள்.

8. மரச்சாகுபடி மேற்கொள்ள விவசாயிகளிடையே நிலவும் விருப்பத்தினை கண்டறிதல்.

9. மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் விவசாய குழுக்கள் மரம் வளர்க்கும் முறைகளில் விருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றனரா? இவர்களின் விருப்பம் என்ன?

10. எத்தகைய மரச்சாகுபடி முறைகளை விவசாயிகள் விருப்புகின்றனர் என்பதை கண்டறிதல்.

11. மரங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான தொழில்நுட்ப தேவைகளை கண்டறிதல்.

12. மரங்களை விற்பனை செய்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவற்றிற்க்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்தல்.

13. கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளும் முறைகளை விளக்குதல்.

14. நுண் திட்டம் தயாரித்தல், மரம் வளர்ப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திட்டம் செயல்படுத்துவதற்குத் தேவையான விவரங்கள் சேகரித்தல், திட்ட ஆய்வு செய்தல் போன்ற பணிகள் தொண்டு நிறுவனங்கள் மேற்கொள்வது தொடர்பான விளக்கம்.

## இதர நிபந்தனைகள்

1. வரைவு கையேட்டினை திட்ட இயக்குநரின் ஒப்புதல் பெற்று இறுதி வரைவினை சமர்ப்பிக்கவேண்டும்.

2. கையேடு 15 நாட்களுக்குள் தமிழில் தயாரித்து கொடுக்க வேண்டும். கையேடு 5 பிரதிகளும் குறுந்தகடாகவும் கொடுக்கவேண்டும்.

3. ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையில் 50% முன்பணமாகவும் மீதி தொகையினை கையேடு தயாரித்து சமர்ப்பித்த பிறகு வழங்கப்படும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்துடன் தேவைகேற்ப கூடுதல் நிபந்தனைகள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்படும்.

தலைமை திட்ட இயக்குநர்
தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம்
சென்னை - 15.